சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

## ஆணை நாள். 06.07.2026

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**1.வழக்கு எண்.SA 16872/D/2025 & 2.வழக்கு எண்.SA 16867/D/2025**
**3.வழக்கு எண்.SA 16866/D/2025**

திரு சா.ரவிச்சந்திரன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் ஆணையர்,
இணை ஆணையர் அலுவலகம்,
(தலைமையிடம்),
இந்து சமய அறநிலையத்துறை,
நுங்கம்பாக்கம், சென்னை -34. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 18.07.2025 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 10.09.2025 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 15.11.2025 |

******

## ஆணை

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு சா.ரவிச்சந்திரன் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு கோ.ஜெயப்பிரியா, இணை ஆணையர் (சட்டம்) (பொ), இணை ஆணையர் அலுவலகம் (தலைமையிடம்), இந்து சமய அறநிலையத்துறை, நுங்கம்பாக்கம், சென்னை -34 அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

**1.வழக்கு எண்.SA 16872/D/2025**

மனுதாரர் 18.07.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், சந்திரபுரம் கிராம ஊராட்சியில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீ கோபால கிருஷ்ணசாமி திருக்கோயிலின் வசதிகளுக்கு தற்போது பயன்பாட்டில் உள்ள மின் சாதனப் பொருட்களின் பெயர், எண்ணிக்கை விவரம், திருக்கோயிலின் மின் சாதனப் பராமரிப்பு பணிகளில் கழிவு செய்யப்பட்ட மின் சாதனப் பொருட்களின் பெயர், எண்ணிக்கை விவரம் தொடர்பான தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், அரசு சார்பு செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை -09 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

**2.வழக்கு எண்.SA 16867/D/2025**

மனுதாரர் 18.07.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், சந்திரபுரம் கிராம ஊராட்சியில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீ கோபால கிருஷ்ணசாமி திருக்கோயில் நிதி மற்றும் நிர்வாக மேலாண்மை குறித்து ஒவ்வொரு ஆண்டும் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 4(1)(b) ன்படி தாமாக முன் வந்து வெளியிட்ட நிதி மற்றும் நிர்வாக மேலாண்மை அறிக்கை விவரம் தொடர்பான தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், அரசு சார்பு செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை -09 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

**3.வழக்கு எண்.SA 16866/D/2025**

மனுதாரர் 18.07.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், சந்திரபுரம் கிராம ஊராட்சியில் கிராம குடியிருப்பு பகுதிகளில் அமைந்துள்ள வழிபாட்டு தலங்கள் (கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள், குருத்வாரங்கள்) அமைந்துள்ள நிலம் ஆகியவற்றின் பெயர் விவரம் மற்றும் பகுதிகளின் வழிபாட்டு தளத்தின் பெயர் விவரம் தொடர்பான 2 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், அரசு சார்பு செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை -09 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 15.11.2025 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 15.11.2025 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 26.08.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு 26.08.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களாக இல்லை என ஆணையம் கருதுகிறது. எனவே, ஆணையம், பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த, திருமதி இரா.வான்மதி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், இணை ஆணையர் (நகை சரிபார்ப்பு), இணை ஆணையர் அலுவலகம், சென்னை -34 அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 27.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.***

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**1.வழக்கு எண்.SA 16872/D/2025 & 2.வழக்கு எண்.SA 16867/D/2025**</u>

<u>**3.வழக்கு எண்.SA 16866/D/2025**</u>

**பெறுநர்**

<u>**பொது அதிகார அமைப்பு**</u>

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் ஆணையர்,
இணை ஆணையர் அலுவலகம்,
(தலைமையிடம்),
இந்து சமய அறநிலையத்துறை,
நுங்கம்பாக்கம், சென்னை -34.

**மனுதாரர்**
திரு சா.ரவிச்சந்திரன்,
த/பெ.திரு சாமுதி கவுண்டர்,
க.எண்.3/386, நாடார் வட்டம் தெரு பகுதி,
சந்திரபுரம் கிராமம்,
06 வது வார்டு,
ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
நாட்றம்பள்ளி தாலுக்கா,
திருப்பத்தூர் மாவட்டம் - 635 651.

***Copy to: File***
***VP / PA***